# முரசொலி

பக்கங்கள் நான்கு | விலை ரூபா: 5-00

முரசு [illegible] ஒலி 167 ஆங்கிரச சித்திரை 30 (12.05.1992), செவ்வாய்


## தமிழக முரசொலி ஆசிரியர் கைது மன்னிப்பின்பேரில் பின் விடுதலை

தமிழக முரசொலிப் பத்திரிகை ஆசிரியர் எஸ். செல்வம் நேற்று மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் நேற்று மாலை 4 மணி யளவில் சென்னையில் உள்ள இவரது வீட்டில் வைத்து இவர் கைது செய்யப்பட்டு தற்போது தமிழக செயலகத்திலுள்ள சட்டப்பேரவை செயலாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ளார். பலத்த பொலிஸ் காவலும் இங்கு போடப்பட்டுள்ளது. சட்டப்பேரவை உரிமை மீறலுக்காக இவரை கைதுசெய்யுமாறு தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா உத்தரவிட்டதும் அதை எதிர்த்து செல்வம் உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்ததும், மனு உயர் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டதும் தெரிந்ததுவே.

— 4 ஆம் பக்கம் பார்க்க

# புலிகள் மீதான தடை குறித்த யோசனைக்கு இந்திய ராணுவ அதிகாரிகள் கண்டனம்

## நூல்களிலில்லாத புலிகளின் போர்த்தந்திரங்கள்

விடுதலைப் புலிகளின் போர்த்தந்திரங்களை அது பற்றிய எந்த நூலிலும் காண முடியாதென பழகிப்போன போர் முனை இராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனர்: இத்தந்திரங்கள் விடுதலைப் புலிகளின் போர் முறைக்கொண்டு பிடிப்புகளுக்கு உதாரணமாக விளங்குவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

### யூ அமைப்பிலான வியூகம்

மேலும் யூ அமைப்பிலான வியூகமமைத்து மறைந்திருந்து தாக்கும் உத்திகளுக்கு பல இராணுவத்தினர் பலியாகி உள்ளதையும் இதிலிருந்து தப்புவது அநேகமாக சாத்தியமற்றது என்பதையும் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

"எம்மை அவர்கள் மறைந்திருந்து தாக்கும் பகுதிக்கு இழுத்து விட்டு மூன்று திசைகளிலிருந்தும் தாக்குதல்களை நடத்துகின்றனர். முன்பக்கமாக முதலில் தாக்குதல்களை தொடுக்கின்றனர் நாம் இடது பக்கம் திரும்பும் போது அங்கிருந்து தாக்குகின்றனர், நாம் வலது புறம் திரும்பினால் அங்கிருந்தும் தாக்குதலுக்கு உள்ளாகிறோம். கட்டமைவுள்ள இராணுவத்தினருக்கு இது மிகவும் அழிவைக் கொண்டுவரும். இதிலிருந்து தப்புவதற்கான ஒரேவழி விசாலமான முன்னணி அமைப்பை உருவாக்கி மறைந்திருந்து தாக்குதலை தவிர்ப்பதாகும்" என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தனது கட்டுரையில் தெரிவித்துள்ளது.

## வெளிவிவகார, பாதுகாப்பு அமைச்சுக்களினதும் 'றோ' வினதும் கருத்துக்கள் கோரப்பட்டுள்ளன

விடுதலைப்புலிகள் அமைப்பை இந்தியாவில் தடை செய்வது குறித்து ஆலோசிக்கப்படுவதாக செய்திகள் வெளிவரும் இவ்வேளையில் இந்திய நிர்வாக பீடத்தின் அணுகுமுறையை இந்திய முன்னாள் இராணுவ அதிகாரிகள் சிலர் கண்டித்துள்ளனர்,

விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு கொண்டுவர முடியாது போவதற்கு இந்தியாவின் கர்வம் போக்கும் ஒரு வழிச்செலன்மையுமே காரணமாகுமென மேஜர் பாதுரியும், மேஜர் ஜெனரல் சரீக் என்பவர்களும் கூறியுள்ளனர், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு பகுதிகளில் அதிரடிப்படை அணிகளுக்கு தலைமை தாங்கிய அர்ஜுன் கௌசிக் என்பவர் விடுதலைப்புலிகள் சம்பந்தமாக ஜனாதிபதி பிரேமதாஸவின் அணுகு முறையே பொருத்தமானது எனக் கூறியுள்ளதுடன் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பிழையான அணுகுமுறையைக் கையாண்டதால் இந்தியா பிரச்சினையைக் குழப்பியடித்தது என்றும் தெரிவித்துள்ளார்.

### அமைச்சுக்களுக்கிடையும் அமைப்புக்களுக்கிடையும் கருத்து வேறுபாடு

இந்த விவகாரத்தில் வெளிவிவகார அமைச்சுக்கும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்குமிடையிலும் உளவுத்துறை பணியகத்திற்கும் றோ அமைப்புக்குமிடையில் கருத்து வேறுபாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### இன்னுமொரு நாட்டு அமைப்பை இந்தியா எப்படித் தடைசெய்யலாம்

இன்னுமொரு நாட்டைச் சேர்ந்ததும் அந்த நாட்டில் செயற்படுவதுமான ஒரு அமைப்பை இந்தியா எப்படித் தடை செய்ய முடியும்? என்ற கேள்வியை விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது தொடர்பாக சில உயர்மட்ட இந்திய அதிகாரிகள் எழுப்பியுள்ளனர்.

இந்திய மண்ணில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக எந்தவொரு கட்சியோ தனி மனிதரோ பேசுவதையும் பலமாக தடுப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்காத எந்தத் தடையும் வலுவானதாக அமையாதெனவும் இவ்வதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர் எனத் தெரிகிறது. தடையை எவ்வாறு அமுல் செய்வது என்பதே உயர் மட்டத்தில் பிரச்சினையாக உள்ளது.

மேலும் சார்க் அமைப்பின் தலைமை சிறிலங்காவிடம் இருப்பதால் பிரேமதாஸ அரசுக்கெதிராக செயற்படுவதும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்குமென்பதால் சிறிலங்கா சம்பந்தமான முக்கிய கொள்கைத் தீர்மானம் எடுப்பதற்கு இது உசிதமான காலமல்ல எனவும் கருதப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் றோ அதிகாரிகளின் கருத்துக்களை இந்திய மத்திய அரசு அறிந்துகொள்ள வேண்டியிருப்பதும் தடை விதிப்பதில் தாமதமேற்படுவதற்கு காரணமாகவுள்ளதென்றும் கூறப்படுகிறது.

## தமிழக பதற்றநிலையை தீர்க்க மத்திய அரசு முயற்சி

தமிழக சட்டப்பேரவைக்கும் நீதித்துறைக்கும் இடையில் எழுந்துள்ள மோதல் நிலைமை ஏற்பட்ட பதற்றத்தைத் தணிக்க மத்திய அரசு முயலும் என சட்ட இணையமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் நேற்று இராஜ்ய சபையில் தெரிவித்தார்.

| 04 ஆம் பக்கம் பார்க்க

★ சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவு கிளிநொச்சி தாக்குதல் பிரிவு இணைந்து

# ஆனையிறவு 22 காவலரண்கள் தகர்ப்பு

## 22 காவலரண்களிலும் கைப்பற்றிய ஆயுதங்கள்

## 15 படையினர் பலி: ஆயுதங்கள் மீட்பு

# 15 படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு

விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவும் புலிகளின் கிளிநொச்சி தாக்குதல் அணியும் இணைந்து நடத்திய தாக்குதலில் ஆனையிறவில் 22 காவலரண்கள் தகர்க்கப்பட்டுள்ளன.

ஆனையிறவு பரந்தன் பக்கமாக நேற்று அதிகாலை ஒரு மணியளவில் மேற்கொண்ட இந்த அதிரடியில் 15 இராணுவத்தினர் பலியாகினர். எஞ்சியோர் முகாமிற்கு தப்பி ஓட்டம் எடுத்தனர்

முப்பது நிமிட நேரத்தில் துரிதமாக நடத்தி முடிக்கப்பட்ட இத்தாக்குதலின் போது படையினரின் பெருந்தொகையான ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இதேவேளை புலிகளின் மற்றுமோர் அணி பிரதான முகாமை நோக்கி ஷெல் தாக்குதலை நடத்தியது.

ஓரே தாக்குதலில் 22 காவலரண்கள் தகர்க்கப்பட்டது இதுவே முதற்தடவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (07-47)

## ஆனையிறவுப் பகுதியில் விமான, ஷெல் தாக்குதல்

ஆனையிறவில் விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை நடத்திய வெற்றிகரத் தாக்குதலையடுத்து முகாமைச் சுற்றி எங்கும் விமானத்தாக்குதல் நடைபெற்றன.

பிரதான முகாமிலிருந்தும் நாலு திசையிலும் சரமாரியான ஷெல்தாக்குதல் நடைபெற்றுள்ளது.

## இரு புலிகள் வீரச்சாவு

நேற்று அதிகாலை ஆனையிறவு தட்டுவன் கொட்டிப் பகுதியில் இடம் பெற்ற காவல் அரண் தகர்ப்பின் போது விடுதலைப்புலிகள்

— 04ஆம் பக்கம் பார்க்க

## கைப்பற்றிய ஆயுதங்கள்

ஆனையிறவு தெற்கு காவலரண்கள் மீதான தாக்குதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுதவிபரம்:-

- ஏ கே எல் எம், ஜி -02
- ஆர். பி. ஜி - 02
- இதற்கான ஷெல் - 13
- புறப்பலர் - 08
- ரி- 56 துப்பாக்கிகள் - 08
- 40எம் எம்கைத்துப்பாக்கி - 01
- இதற்கான ஷெல் - 14
- சிக்னல் டிவிரன் - 01
- ஜே ஆர் ஒண்டு - 26
- ரி - 81 ரைபிள் கிரனைட் - 01
- தொலை நோக்கி - 01
- நச்சுவாயு தடைக்கருவி-5
- ட்ரம் மகஸீன் - 14
- ரி - 56 மகஸீன் - 20
- ரி - 81 மகஸீன் - 13
- ஜி - 3 மகஸீன் - 01
- 60 எம் எம் பரா ஷெல் - 4
- 60 எம் எம். ஷெல் - 14
- 60 எம். எம் ஷெல் கார்ட்றிச் - 09
- 60 எம் எம் பூஸ்டர் - 20
- பயனெற் கத்தி - 02
- ஏ கே, கோக்சர் - 05
- ஏ கே. எல், எம் ஜி கோக்சர் - 12
- ஐ எம் ரவைகள் -15 949
- நே டோ ரவைகள் - 603
  லிங் - 2039
- புல்லட் புறுாவ் ஜக்கெட் -03

மற்றும் பல இராணுவ சாதனங்கள். (07, 47)

★ தெரிவுக்குழுவின் உத்தேச தீர்வு இது

# வடக்கு- கிழக்கு மாகாணங்கள் இரு தனி ஆளுநர்களின் கீழ்

"இனப்பிரச்சினை தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் உத்தேச தீர்வாக வடக்கு-கிழக்கு மாகாணங்களை இரு ஆளுநர்களின் கீழ் தனித்தனியாகப் பிரித்து இரு மாகாணங்களையும் இணைத்துச் செயற்படக்கூடிய சட்டம் இயற்றும் அதிகாரசபை அமைக்கும் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்படலாமெனக் கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

'தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இந்த அடிப்படையிலான சில தகவல்கள் எட்டியிருப்பதாகவும் ஆனால், எந்த அரசியல் கட்சி இவ்வாறான தீர்வு யோசனையை முன்வைத்துள்ளது என்ற தகவல் எட்டவில்லை எனவும் அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

வட-கிழக்கு இணைப்பு விடயத்தில் தெரிவுக்குழு ஒருமித்த யோசனையை முன்வைக்கவேண்டும் என்பதற்காகத் தெரிவுக்குழுவின் தலைவர் தொடர்ந்தும் அரசியற் கட்சி மட்டத்தில் ஆலோசனைகளை நடத்திவருகிறார். இதேவேளை தமிழ்க்கட்சிகள் மீண்டும் தெரிவுக்குழுவின் தலைவரைச் சந்தித்துத் தமது நிலைமைத் தெளிவுபடுத்தவுள்ளன' எனவும் அப் பத்திரிகை மேலும் எழுதியுள்ளது.

இந்த உத்தேசத் தீர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி அறிவிக்கப்படலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# இணைப்பை ஏற்பதில்லையென பெரியகட்சிகள் தீர்மானம்!

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான உத்தேசத் தீர்வில் வடக்குக் கிழக்கு இணைப்பு இல்லாதுவிட்டால் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து தாம் விலகப்போவதாக ஏழு தமிழ் அரசியற்கட்சிகள் தீர்மானித்திருப்பதாக கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

ஆனால் பெரிய கட்சிகளின் சிரேஷ்ட தலைவர்கள் சிலர் இணைப்பை ஏற்றுக்கொள்வதில்லை என ஆலோசனை நடத்தி தீர்மானம் ஒன்றை எடுத்திருப்பதாகவும் மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் உத்தேசத் தீர்வில் இணைப்பு விடயம் ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுக்கும் என்பதையே இவை காட்டி நிற்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## மின்வெட்டு நீக்கப்பட்டது

நாடு எங்கும் அமுலில் இருந்த மின்சார வெட்டு நீக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு இலங்கை மின்சாரசபை கோரியுள்ளது.

நீரேந்து பகுதிகளில் போதியளவு மழை பெய்திருப்பதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இங்கு தயாராகும் உப்பில் மேலும் அயடீன் சேர்க்கப்படும்

இலங்கையில் உற்பத்தியாகும் உப்பில் மேலும் அயடீன் சத்தைச் சேர்ப்பதற்கு இலங்கை உப்புக்கம்பனி நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இதன் பொருட்டுத் தேவையான அயடீன் கலப்பு இயந்திரங்கள் யுனிசெப் நிறுவனத்தினதும், இந்திய நிறுவனமொன்றினதும் உதவியுடன் இங்கு இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இவற்றில் முதலாவது இயந்திரம் பாலாவி உப்பளத்தில் பொருத்தப்படும்.

அயடீன் சத்துக் குறைவினால் ஏற்படக்கூடிய சுகாதாரக் கேடுகளைத் தடுக்கும் பொருட்டே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## தமிழர்கள் பிராந்திய ரீதியில் வலிமை மிக்கவர்கள் - தொண்டமான்

தமிழ் மக்கள் இலங்கையைப் பொறுத்தவரை சிறுபான்மையினராக இருக்கலாம், ஆனால் பிராந்திய ரீதியில் பார்த்தால் எமது வலிமை எத்தகையது என்பது புரியும்.

இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்கள். அங்குள்ள தமிழ் மக்களோடு சேர்ந்து நாம் தமிழ்க் கலைகளை வளர்க்கவேண்டும்.

இவ்வாறு கிராமிய தொழிற்துறை அமைச்சர் செள. தொண்டமான் தமிழ் சாகித்திய விழாவில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

## கூட்டுறவு ஊழியர்களுக்கும் காப்புறுதித் திட்டம்!

நாட்டிலுள்ள சகல கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கும் காப்புறுதித் திட்டமொன்று உருவாக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கெத்தாராம விளையாட்டரங்கில் சுமார் 40 ஆயிரம் கூட்டுறவுத்துறை ஊழியர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் வைத்து அரசின் இந்த முடிவை ஜனாதிபதி அறிவித்தார்.

கூட்டுறவுத்துறை ஊழியர்கள் நோய்வாய்ப்பட்டு அல்லது விபத்திற் சிக்கிக் கஷ்டப்படும் போது இத்திட்டம் உதவும். பின்னர் படிப்படியாகக் கூட்டுறவுத்துறைத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும், கூட்டுறவு அங்கத்தவர்களுக்கும் பயன்தரக்கூடிய வகையில் இத்திட்டம் விஸ்தரிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## உப்பள ஊழியர்களை ஓய்வுபெற பணிப்பு

இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் 'லங்கா சோல்ட் லிமிடெட்' என மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு இணங்கவும் வடபிராந்தியத்திலுள்ள ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்கள் 1990 ஆம் முதல் இயங்காமல் இருப்பதாலும், உடனடியாக அவற்றை இயங்கவைக்கும் சாத்தியங்கள் இல்லாமையாலும் 1992 ஜனவரி முதல் ஊழியர் சம்பளங்கள் வழங்குவதில் தடங்கல்கள் இருப்பதாலும் வடபிராந்தியத்திலுள்ள ஊழியர்கள் புலுமுல்லை அறிக்கையின் பிரகாரம் சுயவிருப்பத்தின் அடிப்படையில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ளலாம் என 'லங்கா சோல்ட் லிமிட்டெட்'டின் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

இவ்விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு வடபிராந்திய ஊழியர்களையும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் 19 ஆம் திகதி புதன், 20 ஆம் திகதி மூரகமோட்டை அலுவலகங்களில் காலை 10 மணிக்கு ஒன்றுகூடுமாறு வடபிராந்திய முகாமையாளர் கேட்டுள்ளார். இதுவரை ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவு பெற்றுக்கொள்ளாதவர்க்கும் அன்றைய தினம் கொடுப்பனவுகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ராஜீவ்காந்தி கொலை

## ஆறு இலங்கைத் தமிழர்களின் வாக்குமூலம் பெறப்பட்டது

ராஜீவ்காந்தி கொலை திட்டமிடப்பட்ட சகலங்களில் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனினதும் பொட்டம்மானினதும் நடமாட்டங்கள் குறித்த தகவல்களை இந்திய அரசாங்கத்திற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு விசாரணைச் சட்டங்களுக்கமைய மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரிலே உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகளினால் இவ்வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. மூலங்களிலேயே இந்த தகவல்கள் அடங்கியுள்ளதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## மேற்காசிய அமைதிக்கான புதிய சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பம்

மேற்காசிய அமைதிப் பேச்சுக்களின் புதிய கட்டம் நேற்று ஆரம்பமானது.

குறிப்பிட்ட விடயங்கள் ... டோக்கியோவில் இவ்வார இறுதியில் பேச்சுக்கள் ஆரம்பமாகும்.

இந்தப் பேச்சுக்களுக்குப் பாலஸ்தீன ...

## அமெரிக்காவில் தாண்டவமாடிய கடும் இனக்கலவரம்

அண்மையில் அமெரிக்க நகரங்களில் ஏற்பட்ட கடும் இனக்கலவரம் ஜனாதிபதி புஷ்ஷின் உள்நாட்டுக் கொள்கையில் ஏற்பட்ட தோல்வியென பல நாடுகள் வர்ணித்துள்ளன.

புஷ்ஷின் நிர்வாகச் சீர்கேட்டினாலேயே இந்தக் கலவரம் இடம்பெற்றதாக பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

புஷ்ஷின் தரமற்ற ஆட்சியே இக் கலவரத்திற்குக் காரணம் என சீனா குற்றம் சாட்டியுள்ளது. ஈரான், லிபியா, தென்கொரியா என்பன அமெரிக்கத் தலைவர்களின் புரட்சியின் ஆரம்பம் இது எனக் கூறியுள்ளன.

நவநாகரிக நாடு, வல்லரசு, புத்திஜீவிகளையும் விஞ்ஞானிகளையும் கொண்ட தேசம் எனக் கருதப்படுகின்ற அமெரிக்காவில் மூன்று நாள்கள் கோரத் தாண்டவமாடிய இவ் இனக்கலவரம் பல உயிர்களைப் பலியெடுத்து, பல்லாயிரக் கணக்கான கோடி பெறுமதியான உடைமைகளை நாசமாக்கிய பின் ஒருவாறு இப்போது அடங்கியுள்ளது.

மோட்டார் வாகன ஓட்டியான ரொட்னி கிங் என்ற கறுப்பினத்தவரை முறைதவறித் தாறுமாறாகத் தாக்கிய நாலு வெள்ளை இனப் பொலிஸ்காரர்கள் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டதன் விளைவாகவே இந்த விபரீதக் கலவரம் வெள்ளையர்களுக்கும் கறுப்பர்களுக்குமிடையே அங்கு ஏற்பட்டது.

பொலிஸ்காரர்களை நீதிமன்றம் விடுதலை செய்ததை எதிர்த்த கறுப்பர்கள் கலிபோர்னியாவின் தலைநகரான லொஸ் ஏஞ்சல்ஸில் வீதிகளில் இறங்கி வெள்ளையர்களைத் தாக்கினர். வெள்ளையர்களும் எதிர்த் தாக்குதல்களைத் தொடுத்தனர்.

30 இலட்சம் மக்கள் வாழும் அமெரிக்காவின் இரண்டாவது பெரிய நகரமாகிய லொஸ் ஏஞ்சல்ஸிலிருந்து சினிமா உலகின் தலைநகரென வர்ணிக்கப்படும் ஹொலிவூட் உள்ளிட்ட அமெரிக்காவின் ஏனைய நகரங்களான நியூயோர்க், அட்லாண்டா, ஜோர்ஜியா, சான்பிரான்சிஸ்கோ, லாஸ்வேகாஸ், நெவாடா, சீற்றல், தம்பா, புளோரிடா, மற்றும் தலைநகரான வாஷிங்டனிலும் கலவரங்கள் பரவின.

1965 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அமெரிக்காவில் இது போன்றதொரு மோசமான கலவரம் இடம்பெறவில்லை எனக்கூறப்படுகின்றது.

ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்ட கறுப்பர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். 44 பேர் கொல்லப்பட்டனர், 2000 பேர் காயமடைந்தனர் 3700 தீவைப்புச் சம்பவங்கள் இடம் பெற்றன, 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வியாபார ஸ்தலங்கள் எரிக்கப்பட்டன. ஆயிரக் ...

[illegible] வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அரசின் வேண்டுகோளின் பேரில் ஸ்ரீலங்காவில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஆறு இலங்கைத் தமிழர்களிடமிருந்து பெறப்பட்ட வாக்கு[illegible]கள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாக்குமூலங்களில் உள்ள விவரம் ராஜீவ்காந்தி கொலை பற்றி விசாரிக்கும் விசேட நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ‘சிறுபான்மையினரின் உரிமைகளை நிறைவேற்றாது விட்டால் ...’

‘சிறுபான்மையினரின் உரிமைகளையும், அபிலாஷைகளையும் நிறைவேற்றாமல் விட்டால் நாடு துண்டாடப்படுவதைத் தடுக்கமுடியாது’ இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸ அட்டாளைச் சேனையில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கல்விக் கல்லூரியையும் ஜனாதிபதி திறந்து வைத்தார்.

குறிப்பிட்ட விடயங்கள் பற்றிய பல தரப்புப் பேச்சுக்கள் இச் சுற்றில் இடம்பெறவுள்ளன.

ஆயுதக் கட்டுப்பாடு பற்றி வாஷிங்டனில் பேச்சு நடக்கிறது. பொருளாதார விடயங்கள் பற்றி வேறு ஒரு இடத்தில் பேச்சு நடக்கும்.

அகதிகள், நீர்வள ஆதாரம், சுற்றுச்சூழல் பற்றி வியன்னா,

இந்தப் பேச்சுக்களுக்கு பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஆதரவு தெரிவித்துள்ள போதிலும் இஸ்ரேல் வாஷிங்டன் பேச்சில் மட்டுமே கலந்து கொள்ளும். மற்றவற்றை அது பகிஷ்கரிக்கும். சிரியாவும், லெபனானும் எல்லாக் கூட்டங்களையும் பகிஷ்கரிக்கின்றன.

## 1680 மைல் பாதயாத்திரை

இந்தியாவில் இந்திரா காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்கள் ஸ்ரீபெரம்புதூரை நோக்கி 1680 மைல் (2800 கிலோ மீற்றர்) தூர பாதயாத்திரை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

எதிர்வரும் 21 ஆம் திகதி இப் பாதயாத்திரை ஸ்ரீபெரம்புதூரை சென்றடையும் என அறிவிக்கப்படுகிறது.

[illegible] பட்ட வியாபார ஸ்தலங்கள் எரிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்டன.

யுத்தம் நடந்து இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி போல் காட்சியளிக்கும் இந்தப் பகுதிகளில் 55 கோடி டாலருக்கும் மேற்பட்ட சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. இது 2500 கோடி இலங்கை ரூபாவிற்குச் சமனானது.

இது இவ்வாறிருக்க ரொட்னிகிங் பொலிஸாரால் தாக்கப்பட்ட சம்பவம் எதிர்பாராத விதமாக வீடியோவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 81 செக்கன்களில் 56 முறை இவர் தலையில் தாக்கப்பட்டுள்ளதை அப் படம் காட்டுகின்றன.

ரொட்னிகிங் தாக்கப்பட்ட வழக்கு விசாரணையில் 12 ஜூரர்கள் இடம் பெற்றனர். இவர்கள் அனைவரும் வெள்ளையர்கள்.

# ஆடைத் தொழிற்சாலைகள் ஆபத்தை எதிர்நோக்குகின்றன

இந்த வருட முடிவுக்குள் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள இருநூறு ஆடைத் தொழிற்சாலைகளும் தமது உற்பத்திகளை விற்பனை செய்வது தொடர்பாகப் பாரிய ஆபத்துக்களை எதிர்நோக்கவுள்ளன.

உற்பத்திகளின் விற்பனவு சாத்தியங்களைப் பற்றி ஆராயாமலே பெருமெடுப்பிலான இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக நிதி உதவி வழங்கும் முகவர் அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சந்தைகளில் விற்பனவு வாய்ப்புகள் குறைந்துள்ளமை பற்றியும் ஐப்பானிய சந்தையில் சிறிலங்கா இன்னும் நிலை கொள்ளாதது பற்றியும் இவ்வமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

# டாக்டர்- சுப்பிரமணியம் சுவாமி அவர்களுக்கு தமிழீழ மகனின் பகிரங்கக் கடிதம் இது!

ஐயா அவர்களே!

'எதிர் வரும் 15. 8 92க்கு முன் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனை இந்திய - மத்திய அரசு பிடிக்க வேண்டும். தவறினால் எதிர்ப்பு இயக்கம் ஒன்றை ஜனதாக்கட்சி ஆரம்பிக்கும்' - இப்படித் தாங்கள் அறிக்கை விட்டிருப்பதைக் கண்டு நாம் அதிர்ச்சி அடையவில்லை; காரணம் முன்பும் பல முறை நீங்கள் அரசியல் வானில் அறிக்கைகள் மூலம் வெறிக்குண்டு கொண்டதையும், அடிபட்டு விழுந்ததையும் நாம் நன்கு அறிவோம். அதில் ஒன்றுதான் தாங்கள் கச்சதீவுக்குப் படகில் ஏறிப்போகப் போவதாக விட்ட அறிக்கை.

இந்திய அரசியலில் சிலர் சுதாநாயகர்களாக வரும் எண்ணத்தோடு, அவ்வப்போது அறிக்கைகளை விடுவது வழக்கம்; என்றாலும் இது எமது இனம் சார்ந்த விடயம் என்பதால், இவ்விளக்கங்களைத் தரலாம் என்று எண்ணுகிறேன்.

ஐயா சுவாமி அவர்களே!

உங்கள் நாட்டு அரசியல் சாக்கடையில் வளர்ந்து வரும் அரசியல் புழுக்களில் ஒன்றாகவா ஈழவிடுதலைத் தலைவரையும் எண்ணிவிட்டீர்கள்? அரசியல் சண்டித்தனங்களும் கோமாளித்தனங்களும் புரிவதற்கு இந்தியா நல்லகளம் என்பது எமக்குத் தெரியும். தமிழ்நாட்டில் இன்று நடைபெற்று வரும் ஆட்சியினைப் பார்த்து உலகமே சிரிப்பதை நாம் அறியாமலா இருக்கிறோம்?

மூன்று வருடங்களாக உங்கள் ராஜீவ்காந்தி அரசு பிரபாகரனைப் பிடிக்க முயற்சித்துப் பார்த்ததே? பிடித்தாவிட்டீர்கள்? ... இரண்டாயிரம் சாரம் கட்டிய பொடியங்களையும் அவர்களுக்குத் தலைமை தாங்கும் தலைவர் வே பிரபாகரனையும் ஏனவே உங்கள் அரசினால் பிடிக்க முடியாமல் போனபோது சிறிலங்கா என்ற சிறிய நாட்டினால் அது எப்படி முடியும்?

ஒன்றரை இலட்சத்திற்கு மேற்பட்ட படைகளைக் கொண்டு வந்து குவித்த உங்கள் நாடு மூன்று வருடங்களாக சுமார் 25000 சதுர மைல் பரப்புள்ள இடங்களில் தேடி அலைந்தார்களே ...... பிடித்தார்களா பிரபாகரனை?

பிரபாகரன் என்ன எலியா? புலி ஐயா, புலி! அதிலும் சிறப்புலி! இரண்டாயிரம் பொடியன்களைப் பத்தாயிரமாக்கிவிட்டுப் போன பெருமை உங்கள் படையினரையே சாரும் மீண்டும் ஒரு முறை பிரபாகரனைப் பிடித்துப் பார்க்க விரும்பினால் உங்கள் படையினருக்கு நீங்களே தலைமை தாங்கி வரலாம்...... உங்கள் நாட்டைப் பொறுத்தவரை தலைமை தாங்குவதற்கு 'தகுதி' என்று ஒன்று இல்லை என்பதும் எமக்குத் தெரியாமலா போய்விடும்?

இரண்டாயிரம் பொடியங்களைப் பிடிக்க வந்து நாலாயிரத்துக்கு மேல் தங்கள் ஆட்கள் அன்று சரிந்தார்கள். இத்தொகைக்கும் மேல் கை, கால்களை இழந்தார்கள் புலிகளில் வெறும் ஆயிரம் பேரைத்தான் உங்கள் படையினரால் கொல்ல முடிந்தது. இன்று பத்தாயிரம் பொடியங்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால்... உங்கள் படைவந்தால் எத்தனை பேரை இவர்கள் (பத்தாயிரம் பேர்) சமாதி ஆக்குவார்கள்? எத்தனை பேரின் கை, கால்கள் பெயர்க்கப்படும்? உங்கள் படை திரும்பிப் போகும் போது பத்தாயிரம் புலிகளை எத்தனை மடங்காகப் பெருக்குவார்கள்? இதையெல்லாம் நீங்களே கணக்குப் பார்த்துச் சொல்லுங்கள், கடைசியில் பிரபாகரனின் செருப்பைக் கூட உங்களால் கொண்டு போக முடியுமா?

ஐயா! பிரபாகரன் ஒரு மாபெரும் முரசாம்; அதன் நாதத்தைக் கேட்டு, உலகின் ஏழு கோடித் தமிழர்களும் தயாராக அணிவகுத்து நிற்கிறார்கள், தெரிந்து கொள்ளுங்கள்; இன்று சுமார் பன்னிரண்டாயிரம் இளம் புலிகள் அந்த ஒப்பற்ற, நாத வெள்ளத்தில் மூழ்கி நிற்கிறார்கள்.

40 இலட்சம் தமிழர்களும், ஈழத்தில் இரும்புக் கவசமாக இருக்கையில், உங்கள் படைகள் இறங்கிப் பார்க்கட்டும். இமயத்தில் எமது பரம்பரையினர் (சோழர்) பொறித்து விட்டு வந்த கொடிதான் ஐயா எமது தமிழீழத்திலும் பறந்து கொண்டிருக்கிறது.

மூன்று மாதத்திற்குள் பிரபாகரனைப் பிடித்துத் தரா விட்டால், ஐ. நா. மூலம் இலங்கைக்கு எதிராகத் தடைகள் விதிக்க வேண்டும் என்று கேட்டிருந்தீர்கள். அப்படியானால் மூன்று வருடங்களாக உங்கள் பெரிய வல்லரசால் பிடிக்க முடியாமல் போனதற்காக உங்கள் நாட்டுக்கெதிராக ஐ. நா. மூலம் என்னென்ன தடைகள் விதிக்கலாம்? நீங்களே பட்டியல் போட்டுப் பார்க்கலாம்.

ஐயா, சுவாமி அவர்களே அரசியலில் எதையாவது குழப்பவேண்டுமானால் அதற்கு இந்தியாவில் விடயமா கிடையாதா? ராமஜென்ம பூமி — பஞ்சாப் — காஷ்மீர் அஸாம் — நக்சலைட் ... இப்படி எத்தனை பெரிய பட்டியல் உண்டு? ஏன் "போபர்ஸ்" பிரச்சினை கூடப் பெரிதாகத் தெரியவில்லையா உங்கள் கண்களுக்கு?

எமது தேசியமும் — எமது விடுதலையும் அழிக்கமுடியாதவை; அதுபோல் எமது விடுதலைப் புலிகள் இயக்கமும் அதன் தலைவர் பிரபாகரனும் மக்களிடமிருந்து பிரிக்க முடியாதவர்கள் ஒப்பற்ற தலைவர் எமது பிரபாகரன் அவர் அப்படிப்பட்ட தலைவனை நிந்திக்க நீர் நினைத்தால் எமது பேனாக்களில் மை சுரந்து கொண்டேயிருக்கும்...

வணக்கம்

இவ்வண்ணம்

ஒரு தமிழீழ மகன்

(கவிஞர். மு. வே. யோ. வாஞ்சிநாதன்)

# சிறிய செய்திகள்

## டொனால்ட் போட்டிகள்

டொனால்ட் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக, சென்றலைற்றஸ் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தெல்லிப்பளை இராஜகொப்பல அணி 63 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இராஜகொப்பல அணி 47 ஓவர்களில் 9 விக்கற்றுக்களைப் பறிகொடுத்து 230 ஓட்டங்களைப் பெற்றது.

அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ் பல்கலைக் கழக அணி 40 ஓவர்களில் சகல விக்கற்றுக்களையும் இழந்து 167 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதினால் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

4 விக்கற்றுகளை வீழ்த்தியதுடன் 61 ஓட்டங்களைப் பெற்ற விஷ்ணுகுலம் 'மான் ஒப்த மாச்சாக' தெரிவுசெய்யப்பட்டார். (16)

## மூப்பனாரும் ஆதரவாம்

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடை செய்யுமாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையை தானும் ஆதரிப்பதாக காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான ஜி.கே.மூப்பனார் தெரிவித்துள்ளார்.

## மே 30 இல் பரீட்சை

கடந்த மார்ச் மாதம் நடைபெறவிருந்த இரண்டாம் பிரிவு இரண்டாந்தர இலங்கைப் பதிவாளர் சேவைக்கான பரீட்சை இம்மாதம் 30 ஆம் திகதி நடைபெறுமென பொது நிருவாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

## பொலநறுவையில் விசாரணை

கிழக்கில் அலிஞ்சி பொத்தனை, முத்துகல, கரா பொல கிராமங்களில் இடம்பெற்ற தமிழ், முஸ்லிம் மக்கள் கொலைகள் பற்றி விசாரணை செய்யவென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள குழு பொலநறுவையில் தங்கியிருந்து விசாரணைகளை மேற்கொள்வதாக அறிவிக்கப்படுகின்றது.

## அம்புலன்ஸ் அன்பளிப்பு

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் வடக்கு கிழக்குப் பகுதி வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்கென 10 புதிய நவீன அம்புலன்ஸ் வண்டிகளை சுகாதார அமைச்சிடம் வழங்கியுள்ளது.

இவற்றிலொன்று மன்னார் ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

## புதிய திட்டம் ஆரம்பம்

எட்டாயிரம் பாடசாலைச் சிறுவர்களுக்கு இலவசமாக அப்பியாசக் கொப்பிகளை வழங்கும் திட்டத்தின் ஆரம்ப விழா நேற்று பம்பலப்பிட்டி சாந்தபோல் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்விச் சேவைகள் அமைச்சர் திருமதி சுனேத்திரா ரணசிங்க இத் திட்டத்தை நேற்று ஆரம்பித்துவைத்தார்.

## புனித பற்றிமா உற்சவம்

பண்டத்தரிப்பு புனித பற்றிமா தேவாலய வருடாந்த திருநாள் பூசை 13 ஆம் திகதி புதன் காலை 7 மணிக்கு நடைபெறும்.

12 ஆம் திகதி செவ்வாய் மாலை நற்கருணைப்பவனியும், 13 ஆம் திகதி காலை திருச்சொரூப பவனியும் நடைபெறும்.

# இந்தியா, ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா தடை விதிக்கும்

உத்தேச ரொக்கட் இயந்திர கொள்வனவு பேரத்தை ரஷ்யாவும் இந்தியாவும் கைவிடவேண்டும், இல்லையேல் இரு நாடுகளுக்கும் எதிராக தடை நடவடிக்கையை மேற்கொள்ளப்போவதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சின் பேச்சாளர் மார்கிறட் வைலர் எச்சரித்துள்ளார்.

இந்தியாமீது அமெரிக்கா செல்வாக்கைச் செலுத்துவதற்கு ஒருபோதும் ரஷ்யா அனுமதிக்காது என்ற ரஷ்ய இராஜாங்க மந்திரி சென்னடி பார்பிலகின் அறிவிப்பை அமெரிக்கா மிகவும் பாரதூரமான விடயமாகக் கருதியிருப்பதையே இது எடுத்துக்காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உத்தேச ரொக்கட் இயந்திரக் கொள்வனவானது ஏவுகணை தொழில்நுட்ப உடன்படிக்கைக்கு முரணானது என்று அறிவித்திருக்கும் அமெரிக்கா இது விடயத்தில் இந்தியா, ரஷ்யாவுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா இரு நாடுகளுக்கும் எதிராக மேற்கொள்ள இருக்கும் தடை நடவடிக்கை விரைவில் அறிவிக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

# கொழும்பு பல்கலைக்கழகம் நேற்று திடீரென மூடப்பட்டது

கொழும்பு பல்கலைக் கழகம் நேற்றுத் திடீரென மூடப்பட்டது. மறு அறிவித்தல் வரை பல்கலைக்கழகம் திறக்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டது.

இங்கு மாணவர்களிடையே எழுந்துள்ள அமைதியின்மையால் தொடர்ந்தும் பல்கலைக்கழகத்தை சுமுகமாக நடத்த முடியாது இருப்பதால் பல்கலைக்கழகம் மறு அறிவித்தல் வரை மூடப்படும் என இப்பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஜி. எல் பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார்.

எந்த மாணவரும் பல்கலைக் கழக வளாகத்திலோ விடுதியிலோ தங்கியிருக்கக் கூடாது எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

## இரண்டு விதமான பரீட்சை முடிவுகள்!

1990 ஆம் ஆண்டு க.பொ.த. பரீட்சையில் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகள் சிலருக்கு இரண்டு விதமான முடிவுகள் நேற்று தபாலில் கிடைத்துள்ளன.

இதில் ஒன்றில் குறைந்த பாடச்சித்தியும் மற்றொன்றில் கூடிய பாடச்சித்திகள் குறிக்கப்பட்டுள்ளதையும் காணமுடிந்தது.

இதனால் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் எந்த பரீட்சை முடிவை தாங்கள் ஏற்றுக்கொள்வது என்று தெரியாமல் திகைத்து நிலையில் உள்ளனர். 06

## புதிய கல்விப்பணிப்பாளர் நியமனத்தில் புதிய சிக்கல்

யாழ்ப்பாணக் கல்விப்பணிப்பாளராக திருகோணமலை வடக்குக் கிழக்குக் கல்வியமைச்சில் கல்விப் பணிப்பாளராகக் கடமைபுரியும் செல்வி தி பெரியதம்பி கடமையை ஏற்கவுள்ளதாக திருகோணமலைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்குக்கிழக்குக் கல்வியமைச்சில் ஒரேயொரு வடபகுதியைச் சேர்ந்த அதிகாரியான இவரை விடுவிப்பதில சிக்கல்கள் இருப்பதாகவும், அவ்வாறிருக்கும் போதுகல்வி வெளியீட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த வடபகுதியைச் சேர்ந்தவரான திரு வாகீசமூர்த்தி வடக்குக்கிழக்குமாகாணக் கல்வியமைச்சில் கடமை ஏற்கவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது யாழ்ப்பாணக் கல்விப்பணிப்பாளராகக் கடமைபுரியும் திரு. இரா. சுந்தரலிங்கத்திற்கு ஒருவருடத்துக்கான ஒப்பந்த ரீதியாகப்பதவி நீடிப்பு வழங்கப்பட்டு வடபகுதிக்கு வெளியே கடமைபுரியப் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இம்மாதம் 14ஆம் திகதிக்கு முதல் இதற்கான முடிவுகள் தெரியவருமென யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 06 68

★ தொண்டமான் கருத்து

## எனது யாழ்ப்பாண விஜயத்தை யாரும் தடுக்க முடியாது

தெரிவுக்குழுவின் ஆலோசனைகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வை பெறத் தவறினால் அமைச்சர் தொண்டமான் யாழ்ப்பாணத்துக்கு சமாதான விஜயத்தை மேற்கொள்ள விருக்கிறார் எனத் தெரிகிறது.

"புத்தகுமாரின் தூதுக்குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளதால் யாரும் என்னைத் தடுக்க முடியாது" என சண்டே டைம்ஸ்க்கு அளித்த பேட்டியில் அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டார்.

தெரிவுக்குழுவில் நம்பிக்கை இழந்துவிட்டீர்களா எனக் கேட்டபோது "தெரிவுக்குழுவின் அங்கத்தவன் என்ற வகையில் எனக்கு நம்பிக்கை உண்டு, நான் நல்லதையே எதிர்பார்ப்பவன், நான் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை வைத்துள்ளேன்" எனக் கூறினார்.

இந்தியாவில் புலிகளைத் தடைசெய்வது சம்பந்தமாக எந்தப்பக்கத்துக்கும் தான் செல்வாக்கைப் பிரயோகிக்கவில்லையெனக் கூறிய அவர் "இப்போதைய நிலைமையில் பல்வேறு சமூகங்களுக்கிடையில சமரசம் காண்பது அன்றி வெறுப்பையும் அவநம்பிக்கையையும் உருவாக்குவதல்ல" எனக் கூறினார்.

## அரசுக்கெதிராக எதிர்க்கட்சிகள் புது நடவடிக்கைகள்

ஆறு இன்று எதிர்க்கட்சிகள் இணைந்து அரசுக்கு எதிராக கொழும்பிலிருந்து இரத்தினபுரிவரையான மனிதச் சங்கிலிப் போராட்டம் ஒன்றை இம்மாதத்தில் நடத்த உள்ளன.

இதற்கிடையில் அதே எதிர்க்கட்சிகள் "சந்த பூசை" "ஜன கோஷ" என்ற இரண்டு புதுமுறையிலான அரசஎதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளனவாம். இவைபற்றிய விபரங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை.

# தோட்ட நிர்வாக தெரிவிற்கு அமைச்சர் தொண்டா அதிருப்தி

தோட்டங்களை நிர்வகிப்பதற்கு வெளிநாட்டுநிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களை அரச பரிசீலிக்காததையிட்டு அமைச்சர் தொண்டமான் அதிருப்தியடைந்துள்ளார்.

அரசினால் நிறுவனங்களை தெரிவு செய்வதற்குக் கடைப்பிடிக்கப்பட்ட முறை நியாயமற்றது என வரம்பு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வேறு துறைகளில் அரச முக்கிய பங்கு கொடுத்திருப்பதால், தோட்டத் தொழிலுக்கும் அவர்களுடைய கேள்விப் பத்திரங்களை ஏற்றிருக்கலாம் என மேலும் கூறினார்.

## எதிர்க்கட்சிகள் விலகஆலோசனை

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவில் இருந்து எதிர்க்கட்சிக் கூட்டணிகள் விலகுவதற்கு ஆலோசிப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சிக்கூட்டணிகளால் கட்டப்பட்ட கட்டத்தில் ஹெலஉறுமயாவுக்குத் தலைமை தாங்கும் திலக்கருணாரத்தின தெரிவுக்குழுவில் இருந்து விலகவேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டுவந்ததாகவும் அதை மாத்தளை மாவட்ட எம். பி ஏகநாயக்காவினால் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

## எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பில்லை

உடுவெபொல விவகாரம் தேர்தல் ஆணையாளரின் அறிக்கை என்பன பற்றிய பாராளுமன்றத்தில் விவாதிக்க அரசாங்கம் மறுத்துள்ளதால் பாராளுமன்ற நடவடிக்கைகளில் எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்காமல் செயற்பட ஆரம்பித்துள்ளன.

இதனால் முக்கிய சட்டமூலங்களை நிறைவேற்றுவதில் பல தாமதங்களை அரசு எதிர்நோக்க வேண்டியுள்ளதெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### தமிழகபதற்ற...

இது குறித்து நேற்று சபையில் பல உறுப்பினர்கள் கேள்விக் கணைகள் தொடுத்தனர். அப்போது பதிலளித்துப் பேசிய இணையமைச்சர், இப்பிரச்சனைக்கு தீர்வுகாண அனைத்துக் கட்சி உடன்பாடு ஒன்றையும் மத்திய அரசு காட்டும் என்றார்

### இருபுலிகள்...

நாகபட்டின 8ஆம் வெளி (சாந்தன் (தந்தையா, பாலசுப்பிரமணியம் 1ஆம் யூனிட் திருவையாறு கிளிநொச்சி, லெம்ரன்சங்கர் (மகாலிங்கம் சௌரிமுருகன். 6ஆம் வட்டாரம் சாம்பல்தீவு திருமலை) ஆகியோர் வீரச்சாவு அடைந்துள்ளனர். 47 07

### தமிழக...

தமிழக சட்டப்பேரவை செயலரின் அறையில தடுத்து வைக்கப்பட்டிருந்த முரசொலி ஆசிரியர் பின்னர் விடுவிக்கப்பட்டதாக பிந்திய செய்திகள் தெரிவித்தன

அடுத்த சட்டப்பேரவை கூட்டத்தொடர் ஆரம்பத்தில தாம் எழுத்து மூலமாக பேரவை சபாநாயகரிடம் மன்னிப்புக் கோருவதாக அவர் அளித்த உறுதிமொழியை அடுத்து அவர் விடுவிக்கப்பட்டார்.

## யாழ். ஆயரின் மும்மடிவிழா

யாழ். ஆயர் அதி. வண். வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் மும்மடிவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது

கொழும்பு அதிமேற்றிராணியார், அதி. வண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ, காலிஆயர் அதி.வண, டொண் சில்வெஸ்ரர் குருநாகல் ஆயர் அதி வண, றேமன்பீரிஸ்,திருமலை மட்டுநகர் ஆயர் அதி. வண, கிங்ஸிலி சுவாம்பிள்ளை மன்னார் ஆயர் அதி. வண தோமஸ் சவுந்தரநாயகம் ஆகியோருடன் யாழ் ஆயர் தமிழ் பண்பாட்டின்படி மங்கல இசையுடன் பேராலயத்துக்கு ஏனைய குருமாருடன் அழைத்து வரப்பட்டார்.

அதன்பின்னர்யாழ் ஆயரும் ஏனைய ஆயரும் குருமாரும் சேர்ந்து கூட்டுத்திருப்பலி நிறைவேற்றினர் 15

## ● ஆயரின் மும்மடி விழாவில் யோகி யாழ். ஆயர் இல்லமும் அழிவுகளின் சாட்சி!

"நீண்டகாலமாக இம்மண்ணில நாம் மிகப்பெரிய அழிவுகளை சந்திக்கிறோம் இந்திய படைகளோடும் சிறீலங்கா படைகளோடும் போராட்டம் நடத்துகிறோம் தமிழ்மக்களின் உரிமைகளை, உணர்வுகளைவெளியாருக்கு எடுத்துக் காட்டி மிகப்பெரும் பங்காற்றியவர் யாழ்ஆயர்,வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை

இவ்வாறு யாழ் பேராலயமுன்றலில் நடைபெற்ற யாழ் ஆயரின் மும்மடி விழா வைபவத்தில் சிறப்புரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலதிபர் திரு யோகரத்தினம் யோகிதெரிவித்தார்

இந்த அழிவுக்கு இப்பேராலயமும் யாழ் ஆயர் இல்லமும் சாட்சிகளாக உள்ளன ஆபத்துக்களை எதிர் நோக்கி உறுதுணையாக தமிழர்களுக்கு நின்றவர்.

இராணுவ அனர்த்தங்களைக் கண்டு வெளியேறாது ஆயர் இல்லத்திலேயே தங்கியிருந்தவர் ஆயர் அவர்கள்,

சுவாமி ஞானப்பிரகாசர், தனிநாயகம் அடிகளார் போன்றுதமிழுக்கு தொண்டாற்றி சிறந்த தமிழ் நூல்களை இந்தமண்ணிற்கு புகழ் செய்த ஆயர் அவர்கள் நீடூழி வாழவேண்டும் என வாழ்த்துகிறேன் என்றார்.

கொழும்பு அதிமேற்றிராணியார் அதி.வண நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ தமிழில் உரையாற்றினார் யாழ் அரச அதிபர் தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாற்றினார், 15 49

## கைதான சுவிஸ்பிரஜை உடலில்..

கொழும்பில் கடந்தவாரம் பெருந்தொகையான ஆயுதங்களுடன் கைதான சுவிஸ் பிரஜைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்புண்டா என பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

இது தொடர்பான தகவல்களைப்பெற பொலிஸார் சுவிஸ்லாந்து பொலிஸின் உதவியை நாடியுள்ளனராம்!

கைதுசெய்யப்பட்ட இவரின் உடலில் துப்பாக்கிச்சூட்டு காயங்கள் போன்ற தழும்புகள் காணப்படுவதாகவும் இவை வைத்திய ரீதியாக பரிசோதிக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவரிடம் புலித்தலைவரின் சின்னம் பொறிக்கப்பட்ட பதக்கம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாம்,

இவரது மனைவியின் உறவினரான தமிழர் ஒருவர் சுவிஸில் இருப்பதாக அவர் பற்றிய தகவல்கள் குறித்தும் சுவிஸ் பொலிஸின் உதவியை ஸ்ரீலங்கா பொலிஸார் நாடியுள்ளனர்.

## ஸ்ரீலங்கா மீதான பிடியை இந்தியா விடக்கூடாது

"விடுதலை புலிகளுக்கெதிரான எந்த நடவடிக்கையும் நீண்ட கால அடிப்படையில் இந்தியாவைப் பாதிக்கக் கூடாது" என்று இந்திய வெளியுறவுச் செயலர் ஜே. என். டிக்சித் கூறியுள்ளதாக டெல்லியிலிருந்து வெளிவரும் இண்டிபெண்டற் என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா விவகாரங்களில் இந்தியா பிடியை தளர்த்தியிருப்பதை டிக்சித் விரும்பவில்லை. இந்தியா பலமுறை ஸ்ரீலங்கா விவகாரங்களில் தலையிட தீவிரவாதக் குழுக்களை பயன்படுத்தியுள்ளாலும் இப்போழுது கணிக்கக் கூடிய ஒரேயொரு அமைப்பாக விடுதலைப்புலிகள் இயக்கம் இருப்பதும் பிரேமதாஸா அரசு விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு எதிராக இல்லாததும் டிக்சித்தின் இந்தக் கருத்துக்குக் காரணமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில், உள்ள அச்சகத்தில் 12-05-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது